1978 மார்ச் 16]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்படிப் பட்ட ஊருணிகள் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கின்றன. ஏற்கெனவே பாசனவசதி கிணறுகள் இல்லாத இடங்களில், கதிர் அறுவடைக் காலத்தில் ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் தட்டுப் பாட்டினால் கதிர் அறுவடை ஆகாமல் போகும் சூழ்நிலை ஏற் பட்டால் இப்படிப்பட்ட ஊருணிகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் அல்லது கிணறுகளை வெட்டி சிறிது ஆழத்திலேயே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். அதைக் கருத்திற் கொண்டு தான் முந்திய காலத்தில் ஏராளமான ஊருணிகளை பல இடங் களில் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, கிராமப் புறங்களில் இருக்கின்ற ஊருணிகள் ஆக்கிரமிப்பாளர்களாலோ அல்லது வேறு வகையிலோ ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பதற்கும் புதிய ஊருணிகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை எல்லாம் அடிப்படை யாக வைத்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

முளகிரிப்பட்டு கிராம முன்சீப்.

*587— வினா. திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இந்த வருடத்தில் (1977) வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு தாலூக்கா முளகிரிப்பட்டு கிராம மணியக்காரரால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

சாத்தனூர் பிரதான கால்வாய் மராமத்து.

*588— வினா. திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயினை பழுதுபார்த்து கால்வாயின் கடைசிப் பகுதியிலுள்ள நிலங்கள் வரை தண்ணீர் தடையின்றி பாய்வதற்கு வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயில் கடைசிப் பகுதி வரை தண்ணீர் தடையின்றி பாய்கின்றது. இவ்வணையின் பிரதான கால்வாய் கரைகளின் சில பகுதிகளை மேலும் பலப்படுத்த மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெறுகின்றன. மேலும் செப்பனிடப்படும் வேலைகள் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது வேலைகள் முறையே நடைபெற்று வருகின்றன என்று கூறினார்கள். கடந்த மூன்றாண்டுக் காலமாக பிரதான கால்வாயில் எந்த வேலையும் செய்யப்படாமல் இருப்பதால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் பாயாமல் இருப்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே கடந்த மூன்றாண்டு காலமாக செலவு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு :—

1974–75-இல்— ரூ. 35,303

1975–76-இல்— ரூ. 23,598

1976–77-இல்— ரூ. 21,246

என்கின்ற அளவில் இந்தப் பணிகளுக்காக தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, கால்வாய் சரியான முறையில் இல்லாத காரணத்தினால் அங்குள்ள சில பகுதிகளிலே 1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் தேதியிலிருந்து இன்று வரை சரியான முறையிலே தண்ணீர் நிலங்களுக்கு பாயவில்லை என்பதால் அந்த கடைமடைப் பகுதியிலுள்ள நான்கைந்து கிராமங்களில் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து அமைச்சரவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாகவே பாசன கடைமடைப் பகுதியிலே இருந்து இப்படி கோரிக்கைகள் எழுப்பப்படுவது வாடிக்கை.